டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 158 2.12.2025 TUESDAY KARTHIGAI : 15 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 158 2.12.2025 செவ்வாய்கிழமை கார்த்திகை : 15 விலை : ரூ.5/–

3 'திறமையான இந்தியர்களால் அமெரிக்கா பலனடைந்துள்ளது' எலான் மஸ்க் பகிர்வு

4 முதல்வர் ஸ்டாலின் 2026ல் மீண்டும் அரியணையில் ஏறுவார் : அமைச்சர் சேகர் பாபு

2 'காசாவில் இடிந்த கட்டிடங்களில் 10,000+ உடல்கள்...' உலுக்கும் மீட்பு அனுபவம்

# டெல்டா மாவட்டங்களில் கொட்டித் தீர்த்த கனமழை இயல்பு வாழ்க்கை பாதிப்பு

சென்னை, டிச.2-

வங்கக் கடலில் உருவான டிட்வா புயல் காரணமாக, டெல்டா மாவட்டங்களில் மழை கொட்டித் தீர்த்தது. டிட்வா புயல் காரணமாக, தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இந்த மழையால் மாவட்டம் முழுவதும் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியுள்ளது. குறிப்பாக, தஞ்சாவூர் அருகே மாரியம்மன் கோயில் பகுதியில் சிவகாமி நகர், சுந்தரம் மீனா நகர் உள்ளிட்ட பகுதிகளில் 2 நாட்களாக பெய்த மழைநீர், வடிகால் இல்லாததால் குடியிருப்பு பகுதிகளில் தேங்கியுள்ளது. இதனால், 200 வீடுகளில் வசிப்போர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரத்தநாடு பகுதியில் நெய்வாசல், குலமங்கலம், பருத்திக் கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் சம்பா, தாளடி நெற்பயிர்களை மழைநீர் சூழ்ந்துள்ளது. வடிகால்களை முறையாக தூர் வாராததால் மழைநீர் வடிவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். மாவட்டம் முழுவதும் 15 ஆயிரம் ஏக்கரில் சம்பா, தாளடி நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கியுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மேலும், மாவட்டம் முழுவதும் 9 வீடுகள் மழையால் சேதமடைந்துள்ளன. ஒரத்தநாடு அருகே கக்கரைக்கோட்டை கிழக்கு பகுதியைச் சேர்ந்த இயேசு என்பவருக்கு சொந்தமான 50 ஆடுகள் மழையின் தாக்கத்தால் உயிரிழந்தன.

மாவட்டத்தில் நேற்று காலை 8.30 மணி நிலவரப்படி பதிவான மழையளவு(மில்லி மீட்டரில்): குருங்குளம் 124 மி.மீ., ஈச்சன்விடுதி 112, நெய்வாசல் 109, ஒரத்தநாடு 104, அய்யம்பேட்டை 93, பேராவூரணி 92, வெட்டிக்காடு 90, பட்டுக்கோட்டை 88, திருவிடைருதூர் 88, பூதலூர் 86, மஞ்சளாறு 86, மதுக்கூர் 86, திருவையாறு 79, தஞ்சாவூர் 77, வல்லம் 70, அணைக்கரை 70, அதிராம்பட்டினம் 67,



திருக்காட்டுப்பள்ளி 62, பாபநாசம் 59, கும்பகோணம் 51, கல்லணை 36.

நாகை மாவட்டத்தில்...

நாகை மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக விடிய விடிய பரவலாக மழை பெய்தது. இதனால், தாழ்வான பகுதிகளில் மழைநீர் சூழ்ந்து பொதுமக்களில் இயல்பு வாழ்க்கை பாதித்துள்ளது. நாகை சாலமன் தோட்டம், பாப்பாகோவில், நரியங்குடி, வேதாரண்யம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள நிவாரண முகாம்களில் 90க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

புயல் காரணமாக கடல் கடும் சீற்றத்துடன் காணப்பட்டது. கடலோர பகுதிகளில் தரைக்காற்று பலமாக வீசி வருகிறது. இதனால், மீனவர்கள் கடலுக்குச் செல்லாமல் 750 விசைப்படகுகள், 3,500 பைபர் படகுகள் கரையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

மேலும், மாவட்டத்தில் 60,000 ஏக்கரில் சம்பா, தாளடி பயிர்களை மழைநீர் சூழ்ந்துள்ளது. ஏற்கெனவே பெய்த மழையால் நீரில் மூழ்கிய பயிர்கள் தற்போது அழுகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் கவலையடைந்துள்ள விவசாயிகள், பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்து, உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாவட்டத்தில் நேற்று காலை வரை பெய்த மழையளவு(சென்டி மீட்டரில்): நாகை 15.25, திருப்பூண்டி 13.07, வேளாங்கண்ணி 11.74, திருக்குவளை 11.22, தலைஞாயிறு 10.12, வேதாரண்யம் 10.58, கோடியக்கரை 11.12.

திருவாரூர் மாவட்டத்தில்...

திருவாரூர் மாவட்டத்தில் தொடர் மழையால் 75,000 ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். மாவட்டத்தில் 5 இடங்களில் நிவாரண முகாம்கள் திறக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் நேற்று காலை வரை பதிவான மழையளவு(சென்டி மீட்டரில்): திருவாரூர் 13.7, நன்னிலம் 12.44, முத்துப்பேட்டை 11.3, வலங்கைமான் 8.96, மன்னார்குடி 9.6, நீடாமங்கலம் 9.3, குடவாசல் 7.4, திருத்துறைப்பூண்டி 7.3.

மயிலாடுதுறை மாவட்டத்தில்...

மயிலாடுதுறை மாவட்டத்தில் நேற்று லேசான மழை விட்டுவிட்டு பெய்தது. ஆனாலும், தொடர் மழையால் பல இடங்களில் நீர் தேங்கியுள்ளதால் 2வது நாளாக நேற்று மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது. கடல் மிகுந்த சீற்றத்துடன் காணப்பட்டது. 55,000 ஏக்கர் நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கியுள்ளதாக வேளாண் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தரங்கம்பாடி, காழியப்பநல்லூர், எடுத்துக்கட்டி, சாத்தனூர், சந்திரப்பாடி, கூழையாறு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள குடியிருப்புகளை மழைநீர் சூழ்ந்துள்ளது.

மயிலாடுதுறை அருகே கீழபட்டமங்கலம் ஊராட்சியில் 2 வீடுகள் சேதமடைந்தன. இதில், வரதராஜன் மனைவி காந்தி காயமடைந்து, மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். மாவட்டத்தில் நேற்று காலை 8.30 மணி முதல் மதியம் 2.30 மணி வரை பதிவான மழையளவு(மில்லி மீட்டரில்): மயிலாடுதுறை 9.20, மணல்மேடு 5, சீர்காழி 9.10, கொள்ளிடம் 7.20, தரங்கம்பாடி 12.20, செம்பனார்கோவில் 12.

காரைக்கால் மாவட்டத்தில் நேற்று முழுவதும் விட்டுவிட்டு லேசான மழை பெய்தது. கனமழை காரணமாக காரைக்கால் நகரப் பகுதியில் செல்லம்மாள் நகர், ஜாபர் மரைக்காயர் தெரு, மாஸ் நகர் உள்ளிட்ட குடியிருப்பு பகுதிகளிலும், தாழ்வான பகுதிகளிலும் மழைநீர் தேங்கியது. மழையின் தீவிரம் குறைந்திருந்ததால் சில இடங்களில் நீர் வடியத் தொடங்கியது. திருநள்ளாறு, நெடுங்காடு, கோட்டுச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் பெரும்பாலான வயல்களில் நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

## அரியலூர் ஏடி பஞ்சாயத்து பழனிசாமியின் பகல் கொள்ளை...

அரியலூர், டிச.2-

அரியலூர் மாவட்டத்தில் வெண்டிலேட்டர் வாங்கியதிலும், குப்பை வண்டிகள் வாங்கியதிலும் அரியலூர் உதவி இயக்குனர், ஊராட்சிகள் உதவி இயக்குனர் பழனிச்சாமி கோடிகளில் பாக்கெட்டை நிரப்பி விட்டார் என்று அரியலூர் ஆட்சியரக வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வரும் நிலையில், இது சம்பந்தமாக விசாரித்த போது, வெண்டிலேட்டர்கள் 210 பஞ்சாயத்துகளுக்கும் தலா ரூ.50,000



வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதில் கிட்டத்தட்ட 50 லட்சத்தை பழனிச்சாமி சுருட்டி விட்டாராம்.

குப்பை வண்டிகள் 240 வாங்கியதில், ஒரு குப்பை வண்டிக்கு ரூ. 1,80,000 ம் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்த போது, உதவி இயக்குனரோ ரூ. 2,80,000 என்று பில் போட்டு சில கோடிகளை பார்த்து விட்டாராம்.

இதை விட முக்கியமான தகவல் கிடைத்தது என்னவென்றால், திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில், எஸ்டேட் வாங்கி இருப்பதாக மாவட்ட ஆட்சியரக வட்டாரத்தில் தற்போது பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. இது சம்பந்தமாக மேலும் பல தகவல்களை திரட்டி கொண்டிருக்கிறோம்.



■ மதுரை மேல அனுப்பானடியில் ஹவுசிங் போர்டு பகுதியில் வசிக்கும், பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், பட்டா வழங்க ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு முகாமில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டு உரையாற்றினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

## பாலமேட்டில் செல்வவிநாயகர், சோனையாசுவாமி, வீரகாளியம்மன் கோவில் கும்பாபிஷேக விழா

அலங்காநல்லூர், டிச.2

மதுரை மாவட்டம் பாலமேட்டில் ஸ்ரீ செல்வவிநாயகர், சோனையாசுவாமி, வீரகாளியம்மன் திருக்கோவில் மஹா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இரண்டு கால யாகசாலை ஹோமங்களை தொடர்ந்து யாக சாலையில் இருந்து வேத மந்திரங்கள் முழங்க கடம் புறப்பாடாகி அழகர்கோவில், ராமேஸ்வரம் உள்ளிட்ட



புனித தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் கோவிலை சுற்றி வலம் வந்து கோவில் மேல் அமைந்துள்ள கலசத்தில் புனிதநீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து சுவாமிகள் மீதும் ஊற்றப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக வணிகவரி மற்றும் பத்திரபதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தார் அவருக்கு விழா கமிட்டியினார் கைத்தறி ஆடை அணிவித்து வரவேற்றனர். இதில்

சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து அன்னதானம் வழங்கப்பட்டது. கும்பாபிஷேக விழா ஏற்பாடுகளை சோனையாசுவாமி அறக்கட்டளை நிர்வாகிகள் செய்திருந்தனர்.

## அவிநாசி சேவூர் பந்தம்பாளையம் கேம்பிரிட்ஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் தேசிய மாணவர் படை NCC முகாம்

திருப்பூர், டிச.2-

அவிநாசி சேவூர் பந்தம் பாளையம் கேம்பிரிட்ஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 24.11.2025 முதல் 3.12.2025 வரை கோவை குரூப் 2TN CTC NCC UNIT நடத்தும் தேசிய மாணவர் படை NCC முகாம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இந்த முகாமை கோவை 2TN CTC NCC UNIT OFFICER COMMANDING கர்னல். மோகித் ராவ் சௌகான் துவக்கி வைத்தார். பள்ளியின் தாளாளர் துரைச்சாமி அவர்கள் முன்னிலை வகித்தார்.

இந்த முகாமில் பல்வேறு கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் இருந்து 507 தேசிய மாணவர் படை மாணவர்கள் கலந்து கொண்டு, அணிவகுப்பு பயிற்சி, துப்பாக்கி சுடுதல் பயிற்சிகளை மேற்கொண்டனர். மேலும் இதில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளாக




விளையாட்டு, யோகா மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

10 நாட்கள் நடைபெறும் இந்த முகாமில் 507 மாணவர்களும், 9 பயிற்றுநர்கள் மற்றும் 10 தேசிய மாணவர் படை அதிகாரிகளும் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை 2TN CTC NCC CBE மற்றும் கேம்பிரிட்ஜ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி நிர்வாகமும் ஏற்பாடு செய்திருந்தது.

# முதல்வர் ஸ்டாலின் 2026ல் மீண்டும் அரியணையில் ஏறுவார் அமைச்சர் சேகர் பாபு

தஞ்சை. டிச.2-

தமிழக முதல்வர் ஸ்டாலின் நோய் நொடி இல்லாமல் எல்லா வளமும் நலமும் பெற்ற 2026ல் மீண்டும் அரியணையில் ஏறுவார் என்று அமைச்சர் சேகர் பாபு கூறியுள்ளார்.

கும்பகோணம் ஆதிகும்பேஸ்வரர் கோயில் கும்பாபிஷேகம் விமரிசையாக நடைபெற்றது. இதில் பங்கேற்ற அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களிடம் கூறியது: தமிழகம் முழுவதும் இன்று (டிச.1) 31 கோயில்களில் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இதுவரை 3,896 கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ள நிலையில் ஜனவரிக்குள் 4 ஆயிரத்தை கடக்கும்.

இதேபோல் திமுக ஆட்சி பெிறுப்பேற்ற பிறகு 700 தேர்கள் பராமத்து பணிகள், 80 புதிய தேர்கள் வடிவமைக்கப் பட்டுள்ளன. மேலும், சுமார் ரூ.40 கோடி மதிப்பில், 600 கோயில்களில் இருக்கின்ற தேர்களுக்கு கொட்டகை அமைக்கப்பட்டுள்ளன. இதேபோல் 1,059 கோயில்களில் இருந்து ரூ.8,119 கோடி மதிப்புள்ள, ஆக்கிரமிக்கப் பட்டிருந்த சுமார் 8,022.48 ஏக்கர் நிலங்கள் முழுவதும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த ஆட்சியில் தான் 15 நாட்களுக்கு ஒருமுறை நடைபெறும் மாநில வல்லுநர்கள் குழுவில் இருந்து இதுவரை 14,498 பழமையான கோயில்களுக்கு அனுமதி பெறப்பட்டிருக்கின்றது. அந்த வகையில் திமுக ஆட்சியில் 12,577 கோயில்களில் ரூ.7,147 கோடி மதிப்பீட்டில் 28,658 திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



தமிழகத்தில் உள்ள கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள உபயதாரர்கள் இதுவரை ரூ.1,557 கோடி வழங்கி உள்ளார்கள். இந்த நிதி மூலம் 12,017 திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன, இறையன்பர்கள் தங்களது நேர்த்தி கடனாக வழங்கும் நன்கொடைகள் முழுமையாக இறைவனுக்கு காணிக்கையாக செலுத்தப்படுகிறது என்பது தான் உண்மை.

தமிழக முதல்வர் ஸ்டாலின் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு நோய் நொடி இல்லாமல் எல்லா வளமும் நலமும் பெற்ற 2026ல் மீண்டும் அரியணையில் ஏறுவார். மானம்பாடி நாகநாத சுவாமி கோயிலை புனரமைப்பதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படும்.

இதேபோல் சுவாமிமலை முருகன் கோயிலில் அமைக்கப்படும் மின்தூக்கி பொங்கல் பண்டிகைக்குள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும். மேலும், கும்பேஸ்வரர் கோயிலில் உள்ள மொட்டை கோபுரத்தில், சுமார் ரூ.3.65 கோடி மதிப்பில் மதிப்பிடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அங்கு 2026 பிப்ரவரிக்குள் ராஜகோபுரத்திற்கான திருப்பணிகள் தொடங்கப்படும்.

இதே போல் கோபுரங்களில் அமைக்கப்பட்டுள்ள ஒளிரும் வண்ணமயமான மின் விளக்குகளை தமிழக முதல்வர் விரைவில் தொடங்கி வைப்பார். கோயில் நிலத்தில் குத்தகைதாரர்களுக்கு அவரது வாரிசுதாரர்கள், அதற்கு உண்டான சான்றிதழை வழங்கி, சட்டம் என்ன சொல்கிறதோ, அதற்குண்டான பெயர் மாற்றங்கள், அந்தப் பகுதி இணை ஆணையர் அதிகாரத்திற்குட்ப்பட்ட வழங்குவார். இதில் ஏதேனும் குறுக்கீடு இருந்தால், அதில் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிடுகிறேன். இவ்வாறு அமைச்சர் சேகர்பாபு கூறினார்.

இந்த செய்தியாளர் சந்திப்பின் போது, அமைச்சர் சேகர்பாபுவுடன் உயர் கல்விதுறை அமைச்சர் கே□வி. செழியன், எம்எல்ஏ சாக்கோட்டை க.அன்பழகன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# பிரதமர் மோடி 'அதிசய மகான் நயினார் நாகேந்திரன்

சென்னை, டிச.2-

பிரதமர் மோடியின், 'மனதின் குரல்' நிகழ்ச்சியில், தமிழகம் தனி சிறப்பிடம் பெற்றது, மகிழ்ச்சி அளிக்கிறது. இயற்கை வேளாண்மை மாநாட்டை துவங்கி வைக்க, கோவைக்கு வருகை புரிந்ததை, மோடி நினைவு கூர்ந்தார்உலகின் பழமையான மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியும், உலகின் பழமையான நகரங்களில் ஒன்றான காசியும், ஒன்றாக சங்கமிக்கும், 'காசி தமிழ் சங்கமம்' நாளை



துவங்குவதாக அறிவித்தார். இதன் கருப்பொருள் 'தமிழ் கற்கலாம்' என தெரிவித்த, மோடியின் தமிழ் நேசமும், அவர் தமிழ் மொழி மீது கொண்டுள்ள பற்றும், ஆச்சரியப்பட வைக்கின்றனதமிழை, வெறும் அரசியல் மொழியாக மட்டுமே பயன்படுத்தி வரும் சில தமிழக தலைவர்களுக்கு மத்தியில், தமிழ் தாய்மொழியாக இல்லாவிட்டாலும், அதன் மீது அளவற்ற அன்பு வைத்திருக்கும் பிரதமர், உண்மையில் ஓர் அதிசய மகான்

# 300 பேர் பலி; 400+ மாயம்: இலங்கையில் டிட்வா விட்டுச் சென்ற பேரழிவுத் தடங்கள்

வங்கக் கடலில் உருவான டிட்வா புயல் இலங்கை வரலாற்றில் மறக்க முடியாத ஒரு மோசமான பேரிடராக மாறியிருக்கிறது. அந்நாட்டின் பெரும் பகுதியைச் சூறையாடிய இந்தப் புயலின் கோரத் தாண்டவம், மிகப் பெரிய உயிர்ச்சேதத்தையும், பொருளாதார இழப்பையும் ஏற்படுத்தி, மக்களை மீளாத துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.



வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, படிப்படியாகத் தீவிரமடைந்து புயலாக வலுப்பெற்றது. இது நவம்பர் இறுதியில் இலங்கையை நோக்கி நகர்ந்ததால், அங்கு பல பகுதிகளில் வரலாறு காணாத கனமழை கொட்டித் தீர்த்தது. தொடக்கத்தில் இலங்கையின் கிழக்கு மாகாணங்களான மட்டக்களப்பு, திருகோணமலை ஆகியவற்றைத் தாக்கிய டிட்வா புயல், பின்னர் வடக்கு மாகாணமான யாழ்ப்பாணம் நோக்கி நகர்ந்தது. மாத்தளை போன்ற பகுதிகளில் 56 செ.மீ. வரை மழை பதிவானது.

இந்த பெருமழை காரணமாக, நாட்டின் பல முக்கிய ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. குறிப்பாக கெலனி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் கெ□ழும்புவின் வடக்கு பகுதி முழுவதும் வெள்ளத்தால் சூழப் பட்டுள்ளது. தலைநகர் கொழும்பு முதல் யாழ்ப்பாணம் வரை பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கின. இன்னொருபுறம் நிலச்சரிவுகளாலும் அதிக பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

பதுளை, கேகாலை உள்ளிட்ட மலைப்பாங்கான பகுதிகளில் ஏற்பட்ட மிக மோசமான நிலச்சரிவுகளில் பல கிராமங்கள் முழுமையாகப் புதையுண்டு போயுள்ளன. இந்த பேரழிவை சமாளிக்க இலங்கையில் அவசர நிலையைப் பிரகடனப்படுத்துவதாக அந்நாட்டின் அதிபர் அநுர குமார திசாநாயக்க அறிவித்துள்ளார்.

இன்றைய நிலவரப்படி டிட்வா புயல் பாதிப்பால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 300 ஐ கடந்துள்ளதாக கூறப்படுகிறது. 400க்கும் மேற்பட்டோரை காணவில்லை என்பதால் இந்த பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என்று அஞ்சப்படுகிறது. கிட்டத்தட்ட 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் 1,275 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மின்சாரம், குடிநீர், போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்புச் சேவைகள் பல பகுதிகளில் துண்டிக்கப்பட்டுள்ளன.

புயல் இலங்கை கடற்பரப்பிலிருந்து விலகி, தற்போது தமிழ்நாட்டை நோக்கி நகர்ந்தாலும், இலங்கையின் பல மாவட்டங்கள் இன்னும் வெள்ளக்காடாகவே காட்சியளிக்கின்றன. 24 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காவல்துறை, ராணுவம் மற்றும் மீட்புப் படையினர் இணைந்து, பாதிக்கப்பட்ட பகுதியிலிருந்து மக்களை மீட்கும் பணிகளிலும், நிவாரணப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர். பல பகுதிகளில் வெள்ள நீர் இன்னும் வடியாமல் இருப்பதால் மீட்புப் பணிகளில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. அடுத்த மூன்று நாட்களில் வெள்ள நீர் படிப்படியாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் மீட்பு பணிகளை மேற்கெ□ள்வதற்காக ஆபரேஷன் 'சாகர் பந்து' என்ற பெயரில் நிவாரணப் பணிகளை மேற்கெ□ள்வதற்காக சேட்டக் ஹெலிகாப்டர்கள் ஐஎன்எஸ் விக்ராந்த் கப்பலில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டன. இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு திரும்ப முடியாமல் சிக்கித் தவித்த 300க்கும் மேற்பட்ட இந்திய பயணிகளை இந்திய விமானப் படையினர் மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட இந்தியர்கள் திருவனந்தபுரம் அழைத்து வரப்பட்டு, அங்கிருந்து அவர்களின் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு மெல்ல மீண்டு வந்து கொண்டிருந்த இலங்கையில், இந்த டிட்வா புயல் மிகப்பெரிய சேதத்தை விளைவித்திருக்கிறது;

# காலமுறை பணியாளர்களுக்கு அரசு செய்த நிதி மோசடி: சி.பி.எஸ்., ஒழிப்பு இயக்கம் கண்டனம்

மதுரை, டிச.1-

மதுரையில் சி.பி.எஸ்., ஒழிப்பு இயக்க தலைமை ஒருங்கிணைப்பாளர்கள் ஜெயராஜ ராஜேஸ்வரன், பிரெடெரிக் ஏங்கல்ஸ், செல்வகுமார் கூறியதாவது:

தி.மு.க., ஆட்சி பொறுப்பேற்ற 3 மாதங்களில் நிதித்துறை, அரசு துறையில் சிறப்பு காலமுறை ஊதிய ஊழியர்களுக்கு வருங்காலத்தில் பங்களிப்பு ஓய்வூதியத்திட்டத்தில் சந்தா பிடிக்க தேவையில்லை என தெரிவித்தது. இதை பழைய ஓய்வூதியத் திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கை என நினைத்தோம்.




அரசு துரோகம் இது குறித்து வருவாய்த்துறை ஆணையர் அரசிடம் கேட்டதற்கு 12.8.2021ல் அரசின் தெளிவுரையில், 'சிறப்பு காலமுறை பணியாளருக்கு சந்தா பிடித்தம் தேவையில்லை என்பது கிராம உதவியாளருக்கும் பொருந்தும்' என தெரிவித்தது. பின்பு 31.10.2021 கடிதத்தில், 'அவர்களிடம் பிடித்தம் செய்த தொகையை வட்டியுடன் திரும்ப வழங்குமாறு தெளிவுரை வழங்கப்பட்டது.

அத்துடன் அந்த ஊழியர்களின் கணக்கில் 20 ஆண்டுகளாக அரசு செலுத்திய 10 சதவீத பங்குத்தொகையை அவர்களுக்கு வழங்க இயலாது எனக்கூறியது. இது பணியாளர்களுக்கு அரசு செய்யும் துரோகம். சி.பி.எஸ்.,ஐ ரத்து செய்ய போராடியவர்கள் வேறு வழியின்றி சி.பி.எஸ்.,ஐ பிடிக்க வலியுறுத்தி போராடும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

இந்நிலையில் 2002 முதல் 2005 வரை 140க்கும் மேற்பட்ட கிராம உதவியாளர்கள் ஓய்வு பெற்றனர். அவர்களில் 40க்கும் மேற்பட்டோர் மரணமடைந்துள்ளனர். அவர்களின் சி.பி.எஸ்., இறுதித் தொகையை பெற முயன்றபோது, நிதித்துறையின் தெளிவுரைகள் வரவேண்டியுள்ளதால் அத்தொகையை தர இயலாது என தெரிவிக்கப்பட்டது.

இதை தனியார் நிறுவனம் செய்திருந்தால் மோசடி வழக்கில் சிறை செல்ல வேண்டியதிருக்கும். ஆனால் அரசு இவ்வாறு செய்ததால் யாரிடம் முறையிடுவது என தெரியவில்லை. இதற்காக 3 ஆண்டுகளாக போராடிய அந்த ஊழியர்களுக்கு கடந்த நவ.18 ல் வழங்கிய மற்றொரு தெளிவுரையில் அந்தப் போராட்டத்திற்கும் அரசு முடிவுரை எழுதி விட்டது. இதன்படி அந்த ஊழியர்களின் கணக்கில் அரசு வழங்கிய குறைந்தபட்ச தொகை ரூ.5 லட்சம் இருந்தால், அது பாதியாக குறையும் நிலை உள்ளது. இது மிகப்பெரிய நிதிமோசடி.

கண்டனம் பிடித்த பணத்தை மட்டுமே திரும்பித்தரும் கொடூரம், அரசு பங்களிப்பு அம்போ என்பதால் இதை வன்மையாக கண்டிக்கிறோம் என்றனர்

# புகையிலை, பான் மசாலாவுக்கு புதிய வரி விதிக்க மசோதா பார்லியில் மசோதா தாக்கல் செய்கிறார் நிர்மலாசீதாராமன்

புதுடில்லி, டிச.2-

பார்லிமென்ட் கூட்டத்தொடரில் புகையிலை, பான் மசாலாவுக்கு புதிய வரி விதிக்க, மசோதாவை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்ய உள்ளார்.

ஜி.எஸ்.டி., கவுன்சில் கூட்டத்தில், 5, 12, 18 மற்றும் 28 சதவீதம் என, நான்கு அடுக்குகளாக இருந்த ஜி.எஸ்.டி., விகிதத்தை, 5, 18 என, இரு அடுக்குகளாக மாற்ற ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதே நேரத்தில், சிகரெட், புகையிலை பொருட்கள் உள்ளிட்ட சில பொருட்களுக்கு மட்டும், 40 சதவீத சிறப்பு வரி விதிக்கப்பட்டது. இந்த புதிய நடைமுறை, கடந்த செப்டம்பர் 22ம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது. இதன் பிறகு, கார், ஏசி, வாஷிங் மெஷின், டிவி விற்பனை அதிகரித்துள்ளது.



தற்போது, தீங்கு விளைவிக்கும் பொருட்களின் விலைகள் குறையாமல் நடவடிக்கை எடுக்க மத்திய அரசு தீவிரமாக உள்ளது. பார்லிமென்ட் குளிர்கால கூட்டத்தொடர்தொடங்கி, வரும் டிசம்பர் 19ம் தேதி வரை நடக்க உள்ளது. இந்த கூட்டத்தொடரில், அணுசக்தி மசோதா உட்பட, 14 முக்கிய மசோதாக்களை தாக்கல் செய்து நிறைவேற்றவும் மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. அதில் ஒன்று புகையிலை, பான் மசாலாவுக்கு புதிய வரி விதிக்க மசோதா.

இந்த மசோதாவை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்கிறார். தேதி இதுவரை அறிவிக்கப்படவில்லை.

ஆனால் பார்லி குளிர்கால கூட்டத்தொடரில் மசோதாவை தாக்கல் செய்து நிறைவேற்றி, சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும் என மத்திய அரசு உறுதியாக உள்ளது என்று வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது: புகையிலை மற்றும் பான் மசாலா மூலம் கிடைக்கும் வருமானத்தை சுகாதாரம், தேசிய பாதுகாப்பை மேம்படுத்த அரசாங்கம் பயன்படுத்தும். நுகர்வோருக்கு விலைகள் ஒரே மாதிரியாக இருப்பதை உறுதி செய்வதே யோசனை. இது வருவாயை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கை கிடையாது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# தி.மு.க., ஆட்சியில் விதவைகள்அதிகரிப்பு முன்னாள் அமைச்சர் வளர்மதி பேட்டி

மதுரை, டிச.2-

விதவைகள் எண்ணிக்கை அதிகம் உள்ள மாநிலங்களில் தமிழகம் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது என்பது தான் தி.மு.க., ஆட்சியின் சாதனை என, மதுரையில் அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர் வளர்மதி தெரிவித்தார்.

மதுரை நகரில் எஸ்.ஐ.ஆர்., பணிகளை அ.தி.மு.க., நகர் பொறுப்பாளரான முன்னாள் அமைச்சர் வளர்மதி, முன்னாள் அமைச்சர் செல்லு□ர் ராஜ□ ஆகியோர் ஆய்வு செய்தனர். பின் வளர்மதி கூறியதாவது: ஜெயலலிதா மறைவுக்கு பின் அ.தி.மு.க.,வுக்கு பல சோதனைகள் வந்துள்ளது. அவற்றை தனதாக்கி தாங்கிக்கொண்டவர் பொதுச் செயலாளர்



பழனிசாமி. தி.மு.க.,வுடன் சில துரோகிகள் கைகோர்த்துக் கொண்டு ஜெ.,வின் கனவை சிதைக்கும் வகையில் சதியில் ஈடுபடுகின்றனர்.

எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா காலத்தில் தனிக்கட்சி துவக்கி அ.தி.மு.க.,வை அழிக்க நினைத்தவர்கள் அழிந்து போனது தான் வரலாறு. அ.தி.மு.க.,வால் அடையாளம் பெற்றவர்கள் இரும்புக்கோட்டையில் காகித பந்தை வீசி சேதப்படுத்த நினைக்கின்றனர். அது நடக்காது. 2021ல் தமிழகத்தில் மதுபோதையால் இளம் விதவைகள் அதிகரிப்பதாக கனிமொழி எம்.பி., பொய் பிரசாரம் செய்தார். இன்று விதவைகள் அதிகம் உள்ள மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.

குழந்தைகளுக்கு எதிராக 61 சதவீதம் குற்றங்கள் அதிகரித்துள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளில் 20 ஆயிரத்திற்கும் மேலான பாலியல் சம்பவங்கள் நடந்த நிலையில், மாணவிகளே அதிகம் பாதித்துள்ளனர். இதுதான் தி.மு.க.,வின் சாதனை. எதிர்க்கட்சியாக இருந்த போது கூச்சலிட்ட கனிமொழி, தற்போது ஏன் குரல் எழுப்பவில்லை என்றார்



# சிவகங்கையில் அரசு பஸ்கள் மோதி 11 பேர் பலி; பிரதமர் மோடி வேதனை

சென்னை, டிச.2-

சிவகங்கையில் இரண்டு அரசு பஸ்கள் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில், 11 பேர் உயிரிழந்த சம்பவம் வேதனை அளிக்கிறது என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் திருப்புத்து□ர் அருகே கும்மங்குடியில் இரண்டு அரசு பஸ்கள் நேருக்கு நேர் மோதியதில் பஸ் டிரைவர், 9 பெண்கள் உட்பட 11 பேர் சம்பவயிடத்திலேயே பரிதாபமாக பலியாயினர். மேலும் 40 பேர் பலத்த காயமுற்று அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவத்திற்கு பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இது தொடர்பாக பிரதமர் மோடி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழகத்தின் சிவகங்கையில் நிகழ்ந்த விபத்தில் நேரிட்ட உயிரிழப்புகள் மிகுந்த வேதனை அளிக்கிறது. தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கு ஆறுதலை தெரிவித்துக்கொள்கிறேன்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன். விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 2 லட்சம் நிவாரணம் வழங்கப்படும். காயமடைந்தவர்களுக்கு தலா ரூ. 50,000 வழங்கப்படும். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

ஏற்கனவே விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்திற்கு, தலா 3 லட்சம்; பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோருக்கு, தலா ஒரு லட்சம்; லேசான காயமடைந்து, சிகிச்சை பெறுவோருக்கு, தலா 50 ஆயிரம் ரூபாய், முதல்வர் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கப்படும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்

# ‘வந்தே பாரத்’ ரயிலில் தரமற்ற உணவு விநியோகம் ஆய்வு நடத்த ‘சிட்டிசன் வாய்ஸ்’ கோரிக்கை



கோவை, டிச.2-

வந்தே பாரத் ரயிலில் வசூலிக்கப்படும் கட்டணத்திற்கு ஏற்றவாறு உணவின் தரம் இல்லை’ என குற்றம்சாட்டியுள்ள ‘சிட்டிசன் வாய்ஸ் கோயமுத்தூர்’ அமைப்பு, உணவின் தரம் குறித்து ஆய்வு நடத்த வேண்டும் என தெற்கு ரயில்வே நிர்வாகத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து சிட்டிசன் வாய்ஸ் அமைப்பின் தலைவர் சி.எம். ஜெயராமன், செயலாளர் எம்.எம்.ராஜேந்திரன் ஆகியோர் தெற்கு ரயில்வே பொதுமேலாளர் மற்றும் சேலம் ரயில்வே கோட்ட மேலாளருக்கு அனுப்பியுள்ள மனு: வந்தே பாரத் சேவையில் வசூலிக்கப்படும் கட்டணத்திற்கு ஏற்றவாறு உணவின் தரம் இல்லை என பயணிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

எனவே, உணவு விற்பனையாளர்களின் தர நிர்ணயம், உணவின் தரம் மற்றும் கண்காணிப்பு முறைகளை மறுஆய்வு செய்ய வேண்டும். மேலும், கோவையில் இருந்து பொள்ளாச்சி, மதுரை வழியாக தூத்துக்குடி மற்றும் ராமேஸ்வரத்திற்கான ரயில் சேவைகளை மீண்டும் தொடர வேண்டும். ராமேஸ்வரத்திற்கு இரவு நேர ரயில் சேவையை புதுப்பிக்க வேண்டும். அதிக அளவு பயணிகள் வந்து செல்லும் போத்தனூர் ரயில்நிலைய உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு ரூ.350 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்றுள்ளன.

ஆனால் கட்டுமான பணிகள் சரியாக இல்லாத நிலையில், மேற்கூரைகள் மழைக் காலங்களில் ஒழுகுகின்றன. பயணிகள் நலன் கருதி இவற்றை சீரமைக்க வேண்டும். பயணிகள் நெரிசலை குறைக்கும் வகையில், சென்னை, மும்பை மற்றும் திருச்சி செல்லும் தேர்ந்தெடுக்கப்பட்ட ரயில்களுக்கு போத்தனூரை முனையமாக மேம்படுத்த வேண்டும்.

போத்தனூர் ரயில் நிலையத்தில் தட்கல் பயணச்சீட்டு வழங்கும் நேரங்களில் கூடுதலாக கவுண்டர்களைத் திறக்க வேண்டும். மேலும், கோவை, போத்தனூர், வடகோவை ரயில் நிலையங்களில் கடந்த காலங்களில் இருந்த தொடுதிரை தகவல் இயந்திரங்களை மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும்.

இதன் மூலம் ரயில்கள் இயக்கம் குறித்து பயணிகள் 24 மணி நேரமும் தகவல்களைப் பெற உதவியாக இருக்கும். கோவையில் இருந்து சென்னை செல்லும் நீலகிரி எக்ஸ்பிரஸ், சேரன் எக்ஸ்பிரஸ் மற்றும் இண்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் ரயில்களில் பயணிக்கும் பயணிகள், ரயில் இயக்கத்தின்போது அசவுகர்யத்தை உணர்கின்றனர்.

கோட்ட ரயில்வே பாதுகாப்பு மற்றும் இயந்திரவியல் குழுக்கள் மூலம் விரிவான தொழில்நுட்ப ஆய்வு மேற்கொண்டு, சஸ்பென்ஷன் மற்றும் பெட்டிகளின் இணைப்பு சிக்கல்களைத் தீர்க்க வேண்டும். சதாப்தி மற்றும் வந்தே பாரத் ரயில்களைத் தவிர, மற்ற ரயில்களில் குறிப்பாக, நீலகிரி மற்றும் சேரன் எக்ஸ்பிரஸில் கழிவறைகளின் சுகாதாரம் மிக மோசமாக உள்ளது.

கேரளாவிற்குச் செல்லும் மற்றும் அங்கிருந்து வரும் ரயில்களில் நிலைமை இன்னும் மோசமாக உள்ளது. தனியார் துப்புரவுப் பணியாளர்கள், ரயில் கழிவறைகளை 3 மணி நேரத்திற்கு ஒரு முறை சுத்தம் செய்ய வேண்டும் என்ற விதி இருந்தும், அது முறையாக செய ல்படுத்தப் படுவதில் லை. தூய்மைப் பணி களை உடனடியாக தீவிரப்படுத்த வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.



# கிண்டி ரேஸ் கிளப் நிலத்தில் மழைநீர் சேகரிப்பு குளங்கள் பசுமைவெளி பூங்கா அமைக்க ஐகோர்ட் அனுமதி

சென்னை, டிச.2-

கிண்டியில் உள்ள ரேஸ் கிளப் நிலத்தில், மழை நீரை சேகரிக்கும் வகையில் குளங்கள் அமைக்கவும், சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கவும் அனுமதி அளித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை கிண்டியில் ரேஸ் கிளப்புக்கு வழங்கப்பட்ட நிலத்துக்கான குத்தகையை ரத்து செய்த தமிழக அரசு, மீட்கப்பட்ட இடத்தில் 118 ஏக்கர் பரப்பளவில் தோட்டக்கலைத் துறையின் சார்பில் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக பசுமைவெளி பூங்கா மற்றும் மாநகராட்சி சார்பில் மழை நீரை சேமிக்க நான்கு குளங்கள் என மழைநீர் சேகரிப்பு திட்டமும் அமல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த திட்டங்களை அமல்படுத்துவதை எதிர்த்தும், குத்தகையை ரத்து செய்து, நிலத்தை அரசு சுவாதீனம் எடுத்ததை எதிர்த்தும் ரேஸ் கிளப் நிர்வாகம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.

வழக்கை விசாரித்த தனி நீதிபதி, இந்த விவகாரத்தில் தற்போதைய நிலையே நீடிக்க வேண்டும் என உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த நீதிபதிகள் எஸ்.எம் சுப்பிரமணியம் மற்றும் முகமது ஷபிக் அமர்வு, சென்னை வெள்ளத் தடுப்பு நடவடிக்கையாக, மக்களின் நலன் கருதி, கிண்டி ரேஸ் கிளப் இடத்தில் நான்கு குளங்கள் அமைக்கப்பட்டுள்ளது எனக் கூறி, கிண்டி ரேஸ் கிளப்புக்கு சொந்தமான இடத்தில் மழை நீரை சேகரிக்கும் வகையில் குளங்கள் அமைக்கவும், சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கவும் அனுமதி அளித்து உத்தரவிட்டது.

கடந்த 2015ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் ஏற்பட்ட உயிர்ச் சேதங்களையும், உடைமை சேதங்களையும் சுட்டிக்காட்டிய நீதிபதிகள், கடந்த காலங்களில் மழை வெள்ளத்தால் சென்னையில் ஏற்பட்ட பாதிப்புகளை பார்க்கும் போது இது போன்ற திட்டங்கள் தேவை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

அரசின் இந்த நடவடிக்கை மூலம் சுற்றுச்சூழல் சம நிலை ஏற்படுவதோடு, காற்று மாசுவை குறைக்க இயலும் எனவும் காற்று மாசு என்பது வெறும் சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சினை மட்டுல்ல எனவும் பொதுமக்களின் உடல் நலன் சார்ந்த பிரச்சினை எனவும் உத்தரவில் நீதிபதிகள் கூறியுள்ளனர்.

சென்னை போன்ற பெரு நகரங்களில் நிலம் என்பது மிகவும் பற்றாக்குறையாக உள்ள நிலையில், அரசு நிலத்தை குறிப்பிட்ட தனிநபர்கள், தங்களது தனிப்பட்ட தேவைகளுக்காக பயன்படுத்த அனுமதிப்பது மக்களின் நம்பிக்கையை சீர்குலைப்பது போலாகும் எனவும் கூறிய நீதிபதிகள், தனி நீதிபதி உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளனர்.

# ‘திறமையான இந்தியர்களால் அமெரிக்கா பலனடைந்துள்ளது’ எலான் மஸ்க் பகிர்வு



நியூயார்க். டிச.2-

அமெரிக்காவுக்கு வந்த திறமையான இந்தியர்களால் அமெரிக்க தேசம் பலனடைந்துள்ளது என உலகின் முதல் பணக்காரரான எலான் மஸ்க் கூறியுள்ளார். அவருடன் அண்மையில் செரோதா நிறுவனத்தின் இணை நிறுவனர் நிகில் காமத் பாட்காஸ்ட் நிகழ்ச்சியில் உரையாடி இருந்தார்.

அது உலக அளவில் கவனம் பெற்றுள்ளது. இந்நிலையில், அதில் எலான் மஸ்க் பகிர்ந்து குறித்து விரிவாக பார்ப்போம். இதில் அமெரிக்காவில் பணிபுரியும் இந்தியர்கள், அமெரிக்க குடியேற்ற விதிகள் மற்றும் தனது குடும்பம் குறித்தும் மஸ்க் பேசியுள்ளார்.

“அமெரிக்கர்களின் பணியை பிற நாட்டினர் பறிப்பதாக சொல்லும் கூற்றை பொறுத்த வரையில் அது எந்த அளவுக்கு உண்மை என எனக்கு தெரியவில்லை. நிச்சயம் திறன் கொண்ட பணியாளர்களுக்கு பற்றாக்குறை உள்ளது என்பதை எனது நேரடி அனுபவத்தில் இருந்து சொல்ல முடியும். அவர்களை கண்டறிவது பெரிய சவாலாக உள்ளது. சவாலான பணிகளை மேற்கொள்ள திறமைசாலிகள் வேண்டும். எனது நிறுவனம் அதில் கவனம் செலுத்துகிறது.

எல்லை பகுதிகளில் சட்டவிரோத குடியேற்றத்தை நிச்சயம் தடுத்தாக வேண்டும். முந்தைய பைடன் தலைமையிலான ஆட்சியில் எல்லை பகுதிகளில் பலர் சட்டவிரோதமாக குடியேறினர். அதன் மூலம் ஆதாயம் அடைந்தனர். அதனால் சட்டவிரோத குடியேற்றம் கூடாது.

அமெரிக்காவுக்கு வந்த திறமையான இந்தியர்களால் அமெரிக்க தேசம் பெரிதும் பலனடைந்துள்ளது. அமெரிக்காவுக்கு திறமைசாலிகளின் தேவை உள்ளது. எனது நிறுவனம் உட்பட பல நிறுவனங்கள் திறன் கொண்ட நபர்களுக்கு சராசரிக்கும் கூடுதலான ஊதியத்தை வழங்குகிறது.

அதே நேரத்தில் சில நிறுவனங்கள் எச்1பி விசாவை தவறாக பயன்படுத்துகின்றன. அது மோசமான போக்கு. அதை நிச்சயம் தடுத்தாக வேண்டும். ஆனால், அதற்காக எச்1பி விசா வழங்குவதையே நிறுத்த வேண்டும் என சொல்வதை ஏற்க முடியாது. ஏனெனில் இங்கு திறமைசாலிகளுக்கு தேவை உள்ளது.

எனது மகன் பெயர் சேகர்: எனது இணையர் ஷிவோன் ஜிலிஸ் உடன் நான் பெற்ற மகன்களில் ஒருவருக்கு சேகர் என்ற இந்திய வம்சாவளியை சுட்டும் வகையிலான பெயரை சூட்டியுள்ளோம். சந்திரசேகரின் நினைவாக இந்த பெயரை வைத்துள்ளோம். ஷிவோன் ஜிலிஸின் முன்னோர்கள் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்கள். அது எப்படி என்று எனக்கு தெரியாது. அதனால் இந்த பெயரை வைத்தோம்” என அவர் தெரிவித்தார்.

1983ல் நோபல் பரிசு வென்ற இயற்பியலாளர் சந்திரசேகரின் நினைவாக இந்த பெயரை தனது மகனுக்கு மஸ்க் சூட்டியுள்ளதாக தகவல். ஷிவோன் ஜிலிஸ் மஸ்க் இணையருக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர். 2021ல் இரட்டை குழந்தைகள், 2024 மற்றும் 2025ல் தலா ஒரு குழந்தையையும் அவர்கள் பெற்றனர்.

# ஆண்டுதோறும் 1.50 கோடி பாஸ்போர்ட் வெளியுறவு அமைச்சக அதிகாரி தகவல்



, டெல்லி, டிச.2-

இந்தியாவில், வெளியுறவு அமைச்சகம் வாயிலாக ஆண்டுதோறும், 1.50 கோடி பேருக்கு பாஸ்போர்ட் வழங்கப்படுகிறது.

இந்தியாவில், 452வது தபால் அலுவலக பாஸ்போர்ட் சேவை மையம், கோவை மாவட்டம் பொள்ளாச்சி தலைமை தபால் அலுவலகத்தில் நேற்று துவக்கப்பட்டது.

இதில், பங்கேற்ற பாஸ்போர்ட் சேவை திட்ட இணைச்செயலர் மற்றும் வெளியுறவு அமைச்சக தலைமை பாஸ்போர்ட் அதிகாரி முபாரக், நிருபர்களிடம் கூறியதாவது:

இந்தியாவில், அனைத்து லோக்சபா தொகுதியிலும், பாஸ்போர்ட் சேவை மையம் அமைக்கப்படுகிறது. இதுவரை, 452 பாஸ்போர்ட் சேவை மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இனியும், 32 லோக்சபா தொகுதிகளில் பாஸ்போர்ட் சேவை மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் ஆண்டுதோறும், 1.50 கோடி பேருக்கு பாஸ்போர்ட் வழங்கப்படுகிறது. கடந்த மே மாதம் முதல் இ பாஸ்போர்ட் நடைமுறைக்கு வந்துள்ளது. இதில், ஒரு மின்னணு 'சிப்' பொருத்தப்பட்டிருக்கும். இதன் வாயிலாக பாஸ்போர்ட் வைத்திருப்பவரின் தனிப்பட்ட மற்றும் பயோமெட்ரிக் தகவல் சேமித்து வைக்கப்படுகிறது. இதன் வாயிலாக, பாதுகாப்பையும் உறுதிப்படுத்த முடிகிறது.

அதாவது, சிப்பில் டிஜிட்டல் கையொப்பத்துடன் தகவல்கள் இருக்கும். அதை திருத்தவோ, போலி பாஸ்போர்ட்களை உருவாக்கவோ முடியாது. பாஸ்போர்ட் சேவை திட்டம், நடப்பாண்டு முதல், 'வெர்சன் 2' ஆக, மேம்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, விரைவு, பாதுகாப்பு என, உலகத்தில் உள்ள 202 தூதரகத்திலும் இந்த சேவை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

# பிறவிக் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு மறுவாழ்வு எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவர்கள் அசத்தல்




சென்னை, டிச.2-

பிறவிக் குறைபாடுள்ள நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்கு அதிநவீன அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டு மறுவாழ்வு அளித்துள்ளதாக எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அரசு மருத்துவமனையின் இயக்குநர் (கூடுதல் பொறுப்பு) எஸ்.மதிவாணன், அறுவை சிகிச்சைத் துறை தலைவர் சி.சங்கரபாரதி, பச்சிளங் குழந்தைகள் நலத் துறை தலைவர் முத்துக்குமரன் ஆகியோர் கூறியதாவது: சில குழந்தைகளுக்கு பிறவியிலேயே சுவாசக் குழாயும், உணவுக் குழாயும் பிரியாமல் ஒட்டியிருக்கும். இதனால் உணவுக் குழாய் ஓரிடத்தில் தடைபட்டுவிடும். இக்குழந்தைகளால் வாய் வழியாக உணவருந்த முடியாது.

3 குழந்தைகள்: அத்தகைய பாதிப்புடன் 3 குழந்தைகள் சமீபத்தில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்கு முதல்கட்டமாக கேஸ்ட்ரோக்டமி எனும் சிகிச்சை மூலம் வயிற்றில் சிறு குழாய் பொருத்தி அதன் வழியாக உணவு வழங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக பெருங்குடலில் 15 செ.மீ. வெட்டி எடுக்கப்பட்டு, தடைபட்டிருந்த உணவுக் குழாய் பகுதியில் மாற்றிப் பொருத்தி பிரச்சினை சரிசெய்யப்பட்டது. இதேபோல் பெருங்குடலின் இறுதிப் பகுதியில் உள்ள நரம்புகள் சில குழந்தைகளுக்கு பிறக்கும்போதே செயலிழந்திருக்கும். இதனால் அவர்களுக்கு ஆசனவாய் வழியே கழிவுகள் வெளியேறாது.

மாறாக, அறுவை சிகிச்சை செய்து பெருங்குடல் பகுதியை வெளியே எடுத்து அதன் வாயிலாக கழிவை அகற்ற வழி செய்ய வேண்டும். இந்த சிகிச்சை கொலோனஸ்டமி எனப்படும். இதுவும் மிகச் சிக்கலான ஒன்று.

எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனையில் இந்த வகை சிகிச்சைக்கு பதிலாக ஆசனவாய் வழியே எண்டோஸ்கோபி முறையில் செயலிழந்த பெருங்குடல் பகுதியை நீக்கிவிட்டு, மற்ற பகுதியை இணைக்கும் சிகிச்சை 3 குழந்தைகளுக்கு மேற்கொள்ளப்பட்டது. இதன் பயனாக அவர்கள் அனைவரும் நலம் பெற்றுள்ளனர்.

பிறவியில் ஏற்படும் சிறுநீரகப் பாதை அடைப்புக்குள்ளான 4 குழந்தைகளுக்கும் திறந்தநிலை அறுவை சிகிச்சை மூலம் மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சிகிச்சைகளை தனியார் மருத்துவமனைகளில் மேற்கொள்ள ரூ.15 லட்சம் வரை செலவாகும். ஆனால் இங்கு முதல்வர் காப்பீட்டின்கீழ் இலவசமாக செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.




# திண்டுக்கல் மாவட்ட வரைவு வாக்காளர் பட்டியல் குறித்து மாவட்ட ஆட்சியர் செய்தியாளர் சந்திப்பு

திண்டுக்கல், டிச.2-

திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவரும் மாவட்ட தேர்தல் அதிகாரியுமான வரைவு வாக்காளர் பட்டியல் குறித்து திண்டுக்கல் மாவட்டத்தில் 99% சதவீதம் கணக்கெடுப்பு படிவங்கள் பெறப்பட்டு, 80 சதவீதம் படிவங்கள் திரும்ப மீள பெறப்பட்டு பதிவேற்ற பணிகள் நடைபெற்று வருகிறது என்றும் இந்திய தேர்தல் ஆணையம் 04.12.2025 ம் தேதி வரை அறிவித்திருந்ததை தொடர்ந்து மேலும் ஒரு வார காலம் நீட்டிப்பு செய்து 11.12.2025ம் தேதி வரை நீட்டிப்பு செய்து 16 12 2002ஆம் தேதி வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது என்றும் மேலும் திண்டுக்கல் மாவட்டத்தில் 7 சட்டமன்ற தொகுதிகளில் 2124 வாக்குச்சாவடிகள் மொத்தம் உள்ளது என்றும் மேலும் இறந்த வாக்காளர்களை நீக்குவது குறித்தும் நிரந்தரமாக குடி பெயர்ந்தவர்களை கள ஆய்வு செய்து ஒரு வாக்காளர்களை கூட விடுபடாமல் சேர்க்கப்பட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்றும் இதன் அடிப்படையில் 16.12. 2025 ஆம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்றும் எந்த ஒரு வாக்காளர்களுடைய பெயரும் விடுபடாமல் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்றும் எந்த ஒரு வாக்காளர்களுடைய பெயரையும் நீக்குவது மட்டும் நோக்கம் அல்ல பெயரை சேர்க்கவும் சரியான தகுதியான வாக்காளர்களை உறுதி செய்வதும் தான் எஸ் ஐ ஆரின் நோக்கமாகும் என்று மாவட்ட ஆட்சித் தலைவரும் மாவட்ட தேர்தல் அதிகாரியுமான செ. சரவணன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# எண்ணூர் அருகே நம்பர் பிளேட் இல்லாத பைக்கில் வந்த இளைஞருக்கு ‘பளார்’ விட்ட போலீஸ்காரர்

பொன்னேரி. டிச.2-

எண்ணூர் அருகே எர்ணாவூரில் நம்பர் பிளேட் இல்லாத இரு சக்கர வாகனத்தில் வந்த இளைஞரின் கன்னத்தில் போலீஸ்காரர், ‘பளார்’ விட்ட காணொலி காட்சி, சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.



சென்னை, எண்ணூர் அருகே உள்ள எர்ணாவூர் பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவர், கடந்த 3 தினங்களுக்கு முன்பு, தன் நண்பர் ஒருவரின் பைக்கில் எர்ணாவூர் பகுதியில் சென்று கொண்டிருந்தார்.

அந்த பைக் நம்பர் பிளேட் இல்லாமல் இருந்ததால், அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த எண்ணூர் காவல் நிலைய போலீஸார் இருவர், அந்த இளை ஞரை நிறுத்தி விசாரித்தனர்.

அப்போது, அவர்கள் நம்பர் பிளேட் இல்லாதது குறித்து, இளைஞரிடம் கேள்வி எழுப்பினர். அதற்கு, அந்த இளைஞர், ‘என் நண்பரின் பைக்’ என்று பதில் அளித்தார்.

பதிலில் திருப்தியடையாத போலீஸார், பைக்கின் ஆவணங்களுடன் நண்பரை காவல் நிலையத்துக்கு அழைத்து வாருங்கள் என்று கூறி, இளைஞர் ஓட்டி வந்தபைக்கை பறிமுதல் செய்து, காவல் நிலையத்துக்கு எடுத்து செல்ல முயன்றனர்.

அதனை ஏற்காத இளைஞர், என் நண்பரை இங்கே வர சொல்கிறேன். காவல் நிலையத்துக்கு அழைத்து வர முடியாது எனக்கூறி, பைக்கை காவல் நிலையத்துக்கு எடுத்து செல்லவிடாமல் தடுத்து, தொடர்ந்து வாக்கு வாதத்தில் ஈடுபட்டார்.

இதனால், கோபமடைந்த இரு போலீஸாரில் ஒருவர், இளைஞரின் கன்னத்தில் பளார் விட்டார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அந்த இளைஞர், போலீஸாரிடம் தொடர்ந்து வாக்கு வாதத்தில் ஈடுபட்டார். இந்த காட்சிகளை அங்கு நின்ற சிலர், தங்கள் மொபைல் போன்களில் காணொலியாக பதிவு செய்ததாக தெரிகிறது.

தொடர்ந்து, இளைஞர் ஓட்டி வந்த பைக்கின் உரிமையாளர், போலீஸாரை சந்தித்து, ஆவணங்களை காண்பித்ததோடு, நம்பர் பிளேட் பொருத்தாதற்கு வருத்தம் தெரிவித்தார். இதையடுத்து, அவரிடம் பைக்கை போலீஸார் ஒப்படைத்தனர்.

இந்நிலையில், நம்பர் பிளேட் இல்லாத பைக்கில் வந்த இளைஞரின் கன்னத்தில் போலீஸ்காரர் பளார் விட்ட காணொலி காட்சி, சமூக வலைதளங்களில் வைரலாகி, பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



■ மாவட்ட ஆட்சித் தலைவர் மனிஷ் நாரணவரே தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு, எய்ட்ஸ் விழிப்புணர்வு உறுதி மொழியினை அனைத்து துறை அலுவலர்கள் எடுத்துக் கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன், மாவட்ட சுகாதார அலுவலர் மரு. ஜெயந்தி, திருப்பூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மனோன்மணி, இணை இயக்குனர் சந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் மலர், ஷீலா பூசலட்சுமி மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் உள்ளனர்.




■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகத்தின் (தாட்கோ) மூலம் பயனாளி ஒருவருக்கு இலவச ஆட்டோ மூன்று சக்கர வாகனத்தை மாவட்ட ஆட்சியர் திரு.சரவணன் அவர்கள் வழங்கினார்கள்




■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு இந்திய மாணவர் சங்கம் (SFI) சார்பில் அரசு பள்ளியில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறை போக்க மாணவர்கள் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது



■ மதுரை திருப்பரங்குன்றம் சட்டமன்ற சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மேல அனுப்பானடி துரைராஜ் மேல்நிலைப்பள்ளியில், சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக நடைபெறும் உதவி மையத்தில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர் கணக்கீட்டு படிவங்களை தொலைபேசி செயலி மூலம் பதிவேற்றம் செய்யும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், இ.ஆ.ப., ஆய்வு செய்து பார்வையிட்டார்.



■ மதுரை தெற்கு சட்டமன்ற சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நிர்மலா பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக நடைபெறும் உதவி மையத்தில், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர் கணக்கீட்டு படிவங்களை தொலைபேசி செயலி மூலம் பதிவேற்றம் செய்யும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், இ.ஆ.ப., ஆய்வு செய்து பார்வையிட்டார்.

# தேனி பழனிசெட்டிபட்டி பேரூராட்சி நியாய விலைக் கடையில் தரமற்ற அரிசி பருப்பு விநியோகம்

தேனி டிச.2

தேனி மாவட்டம் பழனிசெட்டிபட்டி பேரூராட்சி பகுதியில் உள்ள நியாய விலை கடை 3ம் நம்பர் கடையில், பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் அரிசி, பருப்பு,அனைத்தும் தரமற்ற வகையில் வழங்கப்பட்டு வருகிறது. என குற்றச் சாட்டு அன்றாட கூலி வேலை செய்யும் ஏழை எளிய மக்கள் இந்த ரேசன் அரிசியை நம்பித்தான் தங்களது வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர், ரேசன் கடைகளில் வழங்கப்பட்டு வரும் இந்த தரமில்லாத அரிசியை வைத்து எங்களால் ஒன்றும் செய்ய முடியாது. இதில் ஒருவித வாசனையும் வருகிறது. கடைக்காரர்களிடம் கேள்வி




கேட்டும் போது இந்த அரிசிதான் போடுவோம் வேணும் என்றால் வாங்குங்கள் இல்லையென்றால் போங்கள் என்று அசால்டாக பதில் தெரிவிக்கின்றனர், எனவே மாவட்ட நிர்வாகம் ஏழை எளிய மக்களுக்கு நல்ல முறையில் தரமான அரிசியை வழங்க வேண்டும் என்று அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்க மாவட்ட செயலாளர் பி.சத்யா கோரிக்கை விடுத்துள்ளார்.

# "உலக அளவில் முதல் 10 இடங்களுக்குள் தமிழ்நாட்டின் மிக இளம் வயது FIDE ரேட்டிங் பெற்ற வீராங்கனை ரயனிகா சிவராம் வரலாறு படைத்தார்"

சென்னை, டிச.2-

ஆறு வயது சிறுமியான ரயனிகா சிவராம், தமிழ்நாட்டின் மிக இளம் வயது FIDE ரேட்டிங் பெற்ற செஸ் வீராங்கனை என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளார். மிக இளம் வயதிலேயே இவர் உலகச் செஸ் தரவரிசைப் பட்டியலில் அதிகாரப்பூர்வமாக இடம்பெற்றுள்ளார். புதிதாகப் பெற்ற இந்த ரேட்டிங் மூலம், அவர் தற்போது இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

தமிழ்நாட்டில் முதல் இடம் (FIDE-யில் ரேட்டிங் வாங்கிய மிக இளம் பெண்)

இந்தியாவில் இரண்டாம் இடம் (நாட்டில் ரேட்டிங் வாங்கிய மிக இளம் பெண்)

உலக அளவில் முதல் 10 இடங்களுக்குள் ("ஆக்டிவாக இருக்கும் இளம் ரேட்டிங் பெற்ற



வீராங்கனைகள்" பிரிவில்)

2019ஆம் ஆண்டு பிறந்த ரயனிகா, ஒழுக்கமான நேர அட்டவணையுடன் பயிற்சி எடுத்து வருகிறார். அவர் கிளாசிக்கல் (Classical) போட்டிகளில் தன்னுடன் விளையாடும் மற்றவர்களைவிடச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார். மாநில அளவிலான மற்றும் FIDE ரேட்டிங் போட்டிகளில் அவர் சமீபத்தில் வலுவான முடிவுகளைப் பெற்றார். அனுபவமுள்ள ரேட்டிங் பெற்ற வீரர்களை எதிர்த்து வெற்றி பெற்றதோடு, தனது வயதுக்கு மீறிய அற்புதமான நகர்த்தல் திறனையும் (positional understanding) வெளிப்படுத்தினார்.

அவருடைய பயிற்சியாளர்கள் இவரை "அபூர்வமான திறமைசாலி, விதிவிலக்கான களப் பார்வை கொண்டவர்" என்று வர்ணிக்கின்றனர். இவர் ஏழு வயதை முடிப்பதற்குள் 1400 முதல் 1500 FIDE ரேட்டிங்கை அடையக்கூடும் என்று ஆரம்பக்கட்ட கணிப்புகள் தெரிவிக்கின்றன. இது இவரை இந்தியாவின் மிகவும் நம்பிக்கைக்குரிய எதிர்காலச் சாம்பியன்களில் ஒருவராக நிலைநிறுத்துகிறது.

ஏற்கனவே இந்தியச் செஸ் உலகின் அசைக்க முடியாத சக்தியாக இருக்கும் தமிழ்நாடு, தனது பாரம்பரியத்தில் மற்றொரு பிரகாசமான நட்சத்திரத்தைச் சேர்த்துள்ளது. செஸ் சமுதாயம் முழுவதும் ரயனிகா சர்வதேச அரங்கில் வேகமாக உயர்ந்து வருவதை ஆவலுடன் கவனித்து வருகிறது.

பெற்றோரின் நன்றிக் குறிப்பு :

ராகுல் (ஸ்கொயர் ஆன் செஸ் அகாடமி Chennai TN), வருண் (சென்னை செஸ் கிளப் Chennai TN) ஆகியோருக்கு பெற்றோர்கள் சிவராம் மற்றும் திருமதி சிவராம் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

# தனியார் நகைக்கடையில் அடகு வைத்த நகையில் ஆறு சவரன் குறைவு அடகு வைத்தவர் தர்ணா

தேனி, டிச.2-

தேனி மாவட்டம் தேவாரம் முத்தூட் கோல்ட் லோன் பைனான்ஸ் நிறுவனத்தில், வீரப்பன் என்பவர் 18.25 சவரன் நகையை திருப்பி வைத்ததாகவும், அதனை திருப்பி தற்பொழுது நகையைக் கேட்கும் பொழுது, 12 சவரன் மட்டுமே திருப்பி கொடுத்துள்ளனர். மீதமுள்ள நகையை திருப்பி தராமல் மூன்று மாதங்களாக அலைக்கழிப்பு செய்ததாகவும்,

இதனால் மன உளைச்சலுக்கு ஆளாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்து, தற்பொழுது முத்தூட் கோல்ட் லோன் பைனான்ஸ் நிறுவனத்தில் உள்ளே தர்ணாவில் ஈடுபட்டார். இதுகுறித்து நகை அடகு வைத்தவர் பெயரில் உள்ள செல்லப்பாண்டி கூறுகையில் முத்தூட் பைனான்ஸில் கடந்த 2023 ஆம் ஆண்டு நகையை அடகு






வைத்திருந்தோம் கிட்டத்தட்ட 18 பவுன் நடகை நகை அடகு வைத்திருந்தோம்.தற்பொழுது நாங்கள் நகையை திருப்பிய போது அவர்கள் முழுவதும் நகையை தரவில்லை

நகை அடகு வைக்கும் போது எந்த ஒரு ரசீதை தராமல் ஒரு வாரம் கழித்து தான் தருகிறார்கள். தொடர்ந்து இந்த நகை அடகு வைத்த எனது மச்சினன் வீரப்பன் மிகவும் மன உளைச்சலுக்கு ஆளாகி, நெஞ்சுவலி வந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். அதனால் தர்ணாவில் ஈடுபட்டார். தகவல் அறிந்து தேவாரம் காவல்துறை அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர். மாவட்ட ஆட்சியரும் மற்றும் காவல் துறையும் மீதி உள்ள நகையை மீட்டு தர வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்.

# ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் 22 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கம் அமைச்சர் ஐ.பெரியசாமி அதிரடி குற்றச்சாட்டு : அதிர்ச்சியில் கைத்தறி நெசவாளர்கள்

## 7 வாக்குச்சாவடி மைய பில்.ஏ.ஓக்களுக்கு களஆய்வு அலுவலர்கள் நியமனம் செய்து வாக்காளரை சேர்க்க மாவட்ட ஆட்சியர் உத்தரவு

சின்னாளபட்டி, டிச.02

ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் 22 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கம் என அமைச்சர் ஐ.பெரியசாமி அதிரடியாக குற்றச்சாட்டியதை அடுத்து சின்னாளபட்டியில் மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமையில் பி.எல்.ஓ, பி.எல்.2 தேர்தல் பணியாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. 7வாக்குச்சாவடி மைய பில்.ஏ.ஓக்களுக்கு களஆய்வு அலுவலர்கள் நியமனம் செய்து வாக்காளரை சேர்க்க மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சின்னாளபட்டி சிறப்பு நிலை பேரூராட்சியில் சுமார் 40ஆயிரம் பேர் வசிக்கின்றனர். சுமார் 26ஆயிரம் வாக்காளர்கள் உள்ளனர். தற்போது எஸ்.ஐ.ஆர். வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணியின் போது, 16ஆயிரத்து 800 வாக்காளர்களை மட்டும் பட்டியலில் இணைத்துவிட்டு மீதமுள்ள வாக்காளர்கள் வெளியூர் சென்றுவிட்டனர் என்று எழுதி விண்ணப்ப படிவங்களை ஒப்படைத்துவிடுங்கள் என ஆத்தூர் தாசில்தார் முத்துமுருகன், மற்றும் மண்டல துணை வட்டாட்சியர் அபிராமி ஆகியோர் சொல்லியதாக கூறப்படுகிறது.



இதனை அடுத்து அவசரகதியில் வாக்காளர் பட்டியல் பணிகளை முடித்துவிட்டனர். இதனால் சுமார் சின்னாளடப்டி பேரூராட்சியில் மட்டும் ஏறக்குறைய 7,227 வாக்காளர்கள் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இந்த தகவல் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு தெரிந்தவுடன் பத்திரிக்கையாளர்கள் சந்திப்பை நடத்தி ஆத்தூர் சட்டமன்ற தொகுஜீயில் எஸ்.ஐ.ஆர். வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணிகளில் நடைபெறும் முறைகேடுகள்குறித்து நிருபர்கள் மத்தியில் எடுத்துரைத்தார். இதனை அடுத்து மாவட்ட ஆட்சியர் சரவணன் அதிரடி நடவடிக்கை எடுத்து காலை 9மணியளவில் சின்னாளபட்டியில் உள்ள சமுதாய கூடத்தில் 26 வாக்குச்சாவடி மையங்களை சேர்ந்த பி.எல்.ஓ, பி.எல்.ஓ2, மற்றும் அரசியல் கட்சி பிரமுகர்களின் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். கூட்டத்தில் கட்சி நிர்வாகிகள் மற்றும் பி.எல்.ஓ, பி.எல்.ஓ2 அனைத்து கட்சி நிர்வாகிகள் மத்தியில் பேசிய மாவட்ட ஆட்சியர் சரவணன் எஸ்.ஐ.ஆர்.வாக்காளர் பட்டியலில் சேர்க்க தேர்தல் ஆணையம் 11.12.2025 வரை நீட்டிப்பு வழங்கியுள்ளது. அதனால் சின்னாளபட்டி பகுதியில் வசிக்கும் வாக்காளர்கள் மற்றும் வெளியூர் சென்றிருக்கும் வாக்காளர்கள் ஒருவரைகூட விடுபடாமல் சேர்க்க வேண்டுமென கூறியதுடன் கண்காணிப்பு அலுவலராக மண்டல துணை வட்டாட்சியர் அபிராமி அவர்களை நியமனம் செய்ததுடன் களஆய்வாளராக 7 பாகங்களுக்கு ஒரு களஆய்வு அலுவலரை நியமனம் செய்துள்ளார். அதன்படி 277 முதல் 283 வரை இளநிலை வருவாய் ஆய்வாளர் குமரன் அவர்களையும் 284 முதல் 290 வரை முதுநிலை வருவாய் ஆய்வாளர் மாரிமுத்துவையும் 291 முதல் 296 வரை வட்டா ஆவண வரைவாளர் பாப்பாத்தி அவர்களையும், 297 முதல் 302 வரை சார்ஆய்வாளர் மகேஸ்வரியை நியமனம் செய்துள்ளார். இவர்கள் தினசரி சம்மந்தப்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு சென்று கள ஆய்வு செய்து வாக்காளர் சேர்க்கும் பணியில் ஈடுபடுவார்கள். ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, வட்டாட்சியர் முத்துமுருகன், கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகேசன், பாஜக முன்னால் மண்டல் தலைவர் விகேஸ், அதிமுகவை சேர்ந்த விஜயகுமார், பேரூராட்சிமன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத்தலைவர் ஆனந்தி பாரதிராஜா, பேரூர்கழக திமுக பொருப்பாளர் பாலகிருஷ்ணன், பொறுப்புகுழு உறுப்பினர்கள் கிருஷ்ணன், நாககண்ணன், மெடிக்கல்கோபி, தம்பிதுரை, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் வினோத் ஒச்சப்பன், உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

# சின்னாளபட்டியில் வெறிநாய்கள் தொல்லை : பள்ளி மாணவர்களை கடித்துக் குதறும் வெறிநாய்கள்

சின்னாளபட்டி, டிச.2-

சின்னாளபட்டியில் வெறிநாய்கள் தொல்லையால் பள்ளிக்கு செல்லும் மாணவர்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டியில் கடந்த 4வருடங்களாக வெறிநாய்கள் தொல்லை அதிகம் உள்ளது. குறிப்பாக கலைஞர் கருணாநிதி, வி.எம்.எஸ்.காலனி, அண்ணா நகர். திருவள்ளுவர் நகர், காமராஜர் சாலை, பூஞ்சோலை பகுதி, பொம்மையசாமி கோவில்



தெருவில் அதிகாலைகளில் பொதுமக்கள் நடமாட முடியாத அளவிற்கு வெறிநாய்கள் தொல்லை அதிகம் உள்ளது. கலைஞர் கருணாநிதி காலனி பகுதியில் தேவாங்கள் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர் ஒருவரிடம் சிறப்பு வகுப்பு (டியூசன்) படிக்க செல்லும் மாணவ, மாணவியர்கள் பலரை வெறிநாய்கள் கடித்துக் குதறியுள்ளது. இது தவிர அண்ணா நகர். வி.எம். எஸ்.காலனி, சின்னாளபட்டி பைப்பாஸ் சாலையில் இரவு 6மணிக்கு மேல் இரு சக்கர வாகனத்தில் வருவோரை நாய்கள் விரட்டி. விரட்டி கடிக்கின்றன. கடி பட்டவர்கள் சின்னாளபட்டியில் உள்ள அரசு சமுதாயநல மையத்திலும், திண்டுக்கல்லில் உள்ள தனியார் மருத்துவமனைகளுக்கும் சிகிச்சைக்கு செல்கின்றனர். தமிழகம் முழுவதும் வெறிநாய்கள் கடித்து ரேபிஸ் நோய் தாக்கி பலர் இறந்த பின்பும் பேரூராட்சி பகுதிகளில் வெறிநாய்களை முறையாக கட்டுப்படுத்த தவறி வருவதோடு நாய்களுக்கு தடுப்பூசியும் முறையாக போடுவதில்லை என பொதுமக்கள் புகார் செய்கின்றனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000